

இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 27.04.2025

# வாஜ்பாய் காலமும் - மோடி காலமும் 3

பா.ஜ.க.வுடன் தி.மு.க. எதற்காக கூட்டணி வைத்துக் கொண்டது என்பது அன்றே தெளிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக சிறுபான்மையினர் உரிமையும், நலனும், பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்பதை தி.மு.க. வெளிப்படையாக அறிவித்தது.

**2.6.1999ல் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு இக்கூட்டணி அமைவதற்கான காரணத்தை ஏற்றுக் கொண்டது. “தேசிய ஜனநாயகக் கூட்டணி முற்றிலும் மதச்சார்பற்று இயங்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம். சிறுபான்மையினரின் தோழனாக - தொண்டனாக - பாதுகாவலனாக - தி.மு. கழகம் தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியை திமுகழகம் ஏற்றுக் கொண்டு - அவர்களுக்கு ஒரு தீங்கென்றால் கழகத்தின் ஒவ்வொரு செயல்வீரனும், பொங்கி எழுந்து - தன் உயிரைக் கொடுத்துப் போரிடுவான். சிறுபான்மையினருக்கு எப்பக்கம் இருந்து தீங்கு வந்தாலும் அதை தி.மு.க. பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆட்சிப் பொறுப்பைத் தூக்கி எறிந்து விட்டு அவர்களுக்குக் கவசமாக இருக்கும்” என்று தி.மு.க. பொதுக்குழு தீர்மானம் உறுதி அளித்தது. அத்தகைய நெஞ்சுரம் தி.மு.க.வுக்கு இருந்தது.**

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அறிக்கை 16.8.1999 அன்று டெல்லியில் பிரதமர் வாஜ்பாய் அவர்களால் வெளியிடப்பட்டது. அதில் தலைவர் கலைஞர் கலந்து கொண்டார். அந்த அறிக்கையின் முகப்பே, தி.மு.க.வின் கொள்கையை கூட்டணியின் கொள்கையாக மாறியதை உணர்த்தியது.

1. தேசிய ஜனநாயகக் கூட்டணிதான் நாட்டின் எதிர்காலம்.
2. அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும்.
3. சாதி மத அடிப்படையில் யாரும் நடத்தப்பட மாட்டார்கள்.
4. நீதியும் நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும்.
5. யாருக்கும் சாதகமாகவோ பாதகமாகவோ நாங்கள் செயல்பட மாட்டோம்.
6. சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளே! நவீனமானதும் சீரமைக்கப்பட்டதுமான நல் இந்தியாவை உருவாக்கிட நாம் கரம்கோத்து இணைந்து நடை போடுவோம்.
7. பழைய தவறான புரிதல்களை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு, மன வேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.
8. **மதச் சார்பின்மை, சமூக நீதி அடிப்படையில் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பளித்து, நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உரிய உரிமைகள் வழங்க உறுதி மேற்கொள்ளப்படுகிறது.**
9. அரசியல் சட்டம் வழங்கியுள்ள அனைத்து உரிமைகளும் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும்.
10. இந்திய நாட்டு மக்கள் அனைவரது உணர்வுக்கும் மதிப்பளிக்கப்படும்.

– என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது. **அதாவது தி.மு.க.வின் கொள்கையை, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியின் கொள்கையாக மாற்றி அறிவிக்க வைத்தார் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி ஒரே ஒரு வாக்குறுதியை பழனிசாமியால், அமித்ஷாவிடம் இருந்து வாங்க முடியுமா? அன்றைய வாஜ்பாய் காலத்துக்கும் இன்றைய மோடி காலத்துக்கும் இதுதான் வித்தியாசம் ஆகும்.**

சென்னையில் 21.8.1999ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய வாஜ்பாய் அவர்கள், ஜெயலலிதா கொடுத்த நெருக்கடிகள் அனைத்தையும் பகிரங்கமாகச் சொன்னார். “ஜெயலலிதா தன் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள ஊழல் வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டும் என்று சொன்னார். தன்மீது மத்திய ஆட்சியினரால் தொடரப்பட்டுள்ள புலனாய்வு அமைப்புகளின் விசாரணையை நிறுத்த வேண்டும் என்றார். தமிழ்நாட்டில் இருக்கும் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்றார். இதை நாங்கள் செய்ய முடியாது என்றோம். அவரது பிளாக்மெயிலுக்கு நாங்கள் உடன்பட முடியாது என்று மறுத்துவிட்டோம்” என்று சொன்னார் வாஜ்பாய்.

அந்தத் தேர்தலில் ஒன்றியத்தில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியில் தி.மு.க. இணைந்தது. அமைச்சரவையில் பங்கெடுத்தது.

**குஜராத் சம்பவம் நடந்த போது அதனைக் கண்டித்து தலைவர் கலைஞர் அறிக்கை வெளியிட்டார். மதவெறி வன்முறையில் ஈடுபடும் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார் கலைஞர். குஜராத் முதலமைச்சராக இருந்த மோடியை பதவி விலகச் சொன்னார் பிரதமர் வாஜ்பாய் என்பதும், அப்போது அவரைக் காப்பாற்றினார் உள்துறை அமைச்சர் அத்வானி என்பதும் அனைவரும் அறிந்ததுதான். காப்பாற்றிய பலனைத் தான் இன்று அத்வானி அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்பதும் அனைவரும் அறிந்ததே!**

“சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில் கட்ட அனுமதித்தால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இருக்காது” என்று 4.3.2002 அன்று தலைவர் கலைஞர் எச்சரிக்கை செய்தார். “குறைந்த பட்ச செயல் திட்டத்தை வகுத்து அதனை ஏற்றுக் கொண்ட பிறகுதான் கூட்டணியில் சேர்ந்தோம். அதில் இருந்து பா.ஜ.க. விலகினால் நாங்கள் கூட்டணியில் இருந்து விலகுவோம்” என்று அறிவித்தார் கலைஞர். 2003 டிசம்பர் 20 பா.ஜ.க. கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியது.

இந்த மாதிரியான நெஞ்சுரம் கொண்ட அரசியலை பழனிசாமியால் நினைத்துப் பார்க்கவே முடியாது. ‘நீங்கள் சேர்ந்தீர்கள், நாங்கள் சேர்ந்தால் மட்டும் குறை சொல்கிறீர்கள்’ என்று சொல்லும் பழனிசாமிக்கு, முதலில் கடந்த காலம் குறித்த புரிதல் வேண்டும்.

**அன்று ஒன்றிய அரசை பிளாக்மெயில் செய்து கொண்டிருந்தார் ஜெயலலிதா. இன்று அ.தி.மு.க.வை பிளாக்மெயில் செய்து கொண்டிருக்கிறது பா.ஜ.க.**

பா.ஜ.க.வின் சாந்தமான முகம் வாஜ்பாய். அதனால்தான் தலைவர் கலைஞரே, ‘ரைட் மேன் – ராங்க் பார்ட்டி’ என்று சொன்னார். அப்படி பேர் வாங்கியவர் வாஜ்பாய். எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் மனோபாவம் கொண்டவராக இருந்தார் அவர். ஆனால் இன்றைய பா.ஜ.க., பாசிசத்தின் உச்சமாக மாறி இருக்கிறது.

‘மாநிலங்களை மதிக்காத’ மோடி – ‘புலனாய்வு அமைப்புகளின் மூலமாக மிரட்டும்’ அமித்ஷா கூட்டணியானது இந்தியாவின் அனைத்துத் தன்மைகளையும், நெறிமுறைகளையும் சூறையாடிக் கொண்டிருக்கிறது.

இன்றைய மோடி, நேற்றைய வாஜ்பாயும் அல்ல. இன்றைய பழனிசாமி, நேற்றைய ஜெயலலிதாவும் அல்ல. வரலாற்றை வாய்ப்புக்கு வந்தபடி பழனிசாமி பேசக்கூடாது.

••



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.4.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஆஸ்திரேலியா நாட்டுத் தூதர் ஃபிலிப் கிரீன் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், சென்னையிலுள்ள ஆஸ்திரேலியா நாட்டு துணைத் தூதர்கள் சியா சாக்கி, டேவிட் எகில்ஸ்டன் (Mr. David Eggleston) கத்திரினா நாப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஆளுநர்களை வைத்து அரசியல் செய்கிறது மோடி அரசு!

# மிரட்டல் அரசியல் பா.ஜ.க.வின் டி.என்.ஏ.வில்தான் ஊறிக் கிடக்கிறது!

### உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் பதிலடி!

**சென்னை, ஏப்.27-**

**அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது எனச் சொன்ன மோடியின் அரசுதான், ஆளுநர்களை வைத்து அரசியல் செய்கிறது எனவும், மிரட்டல் அரசியல் பா.ஜ.க.வின் டி.என்.ஏ.வில் தான் ஊறிக் கிடக்கிறது என்றும், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



அமைச்சர் கோவி. செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

“துணை வேந்தர்கள் மாநாட்டில் பங்கேற்கக்கூடாது என அரசு பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்” எனச் சொல்லியிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். இதற்கு முன்பு ஆளுநர் ரவி கூட்டிய துணை வேந்தர்கள் மாநாட்டில் பங்கேற்ற துணை வேந்தர்கள் இப்போது ஏன் பங்கேற்கவில்லை? இந்தக் கேள்விக்குப் பட்டம் படித்து மேதாவியாக இருக்க வேண்டியதில்லை.

**உச்சநீதிமன்றம் விதித்த காலக்கெடு!**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2ஆவது முறையாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல் அளிக்காததால், அரசியல் சாசனத்தின் 142ஆவது பிரிவைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் ஆளுநருக்குக் காலக்கெடு நிர்ணயித்த நீதிபதிகள், ஆளுநரால் அனுப்பி வைக்கப்படும் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு நிர்ணயித்தனர்.

இந்தத் தீர்ப்புக்கு பிறகுதான் தமிழ்நாடு அரசோடு மல்லுக்கட்ட வேண்டும் என்ற ஆத்திரத்தில் ஆளுநர் ரவி துணை வேந்தர்கள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார். உச்சநீதிமன்றத் தீர்ப்பை அறிந்து மாநாட்டைத் துணை வேந்தர்கள் புறக்கணித்திருக்கிறார்கள். இதற்கு எப்படி மாநில அரசு பொறுப்பாகும்?

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பும் சட்டமும் துணை வேந்தர்களுக்குத் தெரிகிறது. ஆனால், எல்லாம் தெரிந்தும் ஆளுநர்தான் வீம்புக்கு அரசியல் செய்கிறார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு சட்டத்துக்குப் புறம்பாகத் துணை வேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் ரவி கூட்டியிருக்கிறார். அதில் பங்கேற்பது சட்டத்திற்கு எதிராக அமையும் எனக் கருதி, துணை வேந்தர்கள் புறக்கணித்திருக்கிறார்கள். ஆளுநர் ரவிதான் சட்டத்தை மதிக்காமல் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள் என்றால், துணை வேந்தர்களும் அப்படியே நடக்க வேண்டுமா என்ன?

**வீம்புக்கு அரசியல் செய்யும் ஆளுநர் ரவி!**

அண்மையில் கூட தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் பதவிக்குப் புதிய தலைவர் நியமிக்கப்பட்டார். அரசியல் செய்ய ஆசைப்பட்டால், ஆளுநர் ரவி அந்தப் பதவியில் போய் அமர்ந்திருக்கலாமே! எதற்கு ஊட்டிக்குப் போனார்?

**எதையும் சட்ட ரீதியாக எதிர்கொள்ளும் அரசு!**

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித் துறை, என்.ஐ.ஏ. போன்ற அதிகார அமைப்புகளை வைத்துத்தான் ஒன்றிய அரசு எதிர்க்கட்சிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு எதையும் சட்ட ரீதியாகத்தான் எதிர்கொள்வோம். அப்படித்தான் மசோதாக்கள் விவகாரத்தில் வெற்றி பெற்றோம்.

ஆளுநர்கள் அந்தந்த மாநிலப் பல்கலைக்கழகங்களில் வேந்தராகச் செயல்படுவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. பல்கலைக்கழக வேந்தராக ஆளுநர்கள் இருப்பதைப் பற்றி அரசமைப்புச் சட்டத்தில் எதுவும் சொல்லவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களை எல்லாம் பல மாதங்களாகக் கிடப்பில் போட்ட ஆளுநர் ரவிக்கு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்தியா முழுவதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க குடியரசுத் தலைவருக்கும் 3 மாதம் காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டிருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், குடியரசுத் துணை தலைவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ஊட்டிக்கு வந்திருக்கிறார் ஆளுநர் ரவி.

**ஆளுநர் ரவிக்கு துணைபோகும் குடியரசு துணைத் தலைவர்!**

“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு போட்ட வழக்கு ராஜ்பவனைத் தாண்டி ராஷ்டிரபதி பவன் வரை பதம் பார்த்து விட்டதே! என அடிவயிறு எரிந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு ஆளுநர் ரவி கிடப்பில் போட்டு வைத்த மசோதாக்களால்தான் ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பை விமர்சிக்கிறார் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர். இவர் மேற்கு வங்க ஆளுநராக இருந்த போது முதல்வர் மம்தா பானர்ஜி அரசுக்கு எதிராக நடத்திய அடாவடிகளை இந்த நாடு பார்த்தது. அவர் வழியொற்றி நடக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி கூட்டிய துணை வேந்தர்கள் மாநாட்டில் ஜெகதீப் தன்கர் கலந்து கொள்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

“மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட நீதிபதி மதன் மோகன் பூஞ்சி கமிஷன் அறிக்கையின் படி, அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது. ஆனால், மன்மோகன் சிங் அரசோ குஜராத்தில் அரசியல்வாதிகளை மட்டுமல்ல; மாற்றுக் கருத்துகளைக் கொண்ட அரசியல்வாதிகளையும் ஆளுநராக நியமிக்கிறது” எனச் சொன்னவர் யார் தெரியுமா? குஜராத் முதல்வராக இருந்த மோடிதான்!

**மோடி பிரதமரான பின்தான் ஆளுநர்கள் மூலம் அரசுக்கு குடைச்சல்!**

மோடி பிரதமர் ஆன பிறகு பா.ஜ.க.வுக்குப் பிடிக்காத, அவர்களை எதிர்க்கும் மாநில அரசுகளை ஆளுநர்கள் மூலம்தான் குடைச்சலைக் கொடுத்து கொண்டிருக்கிறார். அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது எனச் சொன்ன மோடியின் அரசுதான், ஆளுநர்களை வைத்து அரசியல் செய்கிறது.

பா.ஜ.க.வைச் சேர்ந்த அரசியல்வாதிகளைத்தான் ஆளுநர்களாக மோடி நியமித்தார். மகாராஷ்டிர ஆளுநர் வித்யாசாகர் ராவ் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக இருந்தபோதுதான் சசிகலாவை முதலமைச்சர் பதவி ஏற்கவிடாமல் எடப்பாடி பழனிசாமிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பன்னீர்செல்வத்தையும், பழனிசாமியையும் ஒன்றாகக் கைகோத்து இணைத்து வைத்தார். பன்வாரிலால் புரோகித்தையும், ஆர்.என்.ரவியையும் ஆளுநர்களாக நியமித்து தமிழக அரசுக்குக் குடைச்சலைக் கொடுத்தார்கள்.

**மாநில உரிமைகளுக்காக எதிர்த்து நிற்போம்!**

மிரட்டல் அரசியல் எல்லாம் பா.ஜ.க.வின் டி.என்.ஏ.வில்தான் ஊறிக் கிடக்கிறது. மிரட்டுவது உங்கள் டி.என்.ஏ.வில் இருக்கலாம்; துணிந்து மாநில உரிமைகளுக்காக எதிர்த்து நிற்பதுதான் எங்கள் டி.என்.ஏ.வில் இருக்கிறது.

இவ்வாறு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மேட்டூர் அணை

# ஜீன் 12ஆம் தேதி திறப்பு!

சென்னை, ஏப். 27 -

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பதிலளித்து பேசிய அமைச்சர் துரைமுருகன்,

சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் உள்பட 12 மாவட்டங்களில் 5 ஆயிரத்து 21 கிலோமீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

தூர்வாரும் பணிகளை செயல்படுத்தி முடிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மே மாதம் இறுதிக்குள் தூர்வாரும் பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

இதைத்தொடர்ந்து, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்றும் அமைச்சர் துரைமுருகன் பேரவையில் தெரிவித்தார்.

### சேலம் பெரியார் பல்கலைக்கழக முறைகேடு வழக்கு!

# சூரமங்கலம் காவல்நிலையத்தில் துணைவேந்தர் ஜெகந்நாதனிடம் விசாரணை!

சேலம், ஏப். 27-

சேலம் பெரியார் பல்கலைக்கழக முறைகேடு தொடர்பான விசாரணைக்காக, பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஜெகந்நாதன் சூரமங்கலம் காவல்நிலையத்தில் நேரில் ஆஜரானார்.

பல்கலைக்கழக விதி முறைகளை மீறி சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஜெகந்நாதன் மற்றும் முன்னாள் பதிவாளர் தங்கவேலு உள்ளிட்ட நான்கு பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. வழக்கு விசாரணைக்கு தடைக்கோரி பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜெகந்நாதன் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.


இந்நிலையில், பல்கலைக்கழக முறைகேடு வழக்கு தொடர்பாக, விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு துணை வேந்தர் ஜெகந்நாதனுக்கு சேலம் காவல்துறையினர் சம்மன் அனுப்பினர். அதன்படி, சேலம் சூரமங்கலம் காவல்நிலையத்தில் துணைவேந்தர் ஜெகந்நாதன் நேற்று முன்தினம் காலை நேரில் ஆஜரானார்.

காவல் உதவி ஆணையாளர் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் அவரிடம் வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தினர்.

### கும்பகோணத்தில் – முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம்!

# நாட்டுக்கு உழைத்தவர்க்கு நாம் காட்டும் நன்றியாகும்!

### கவிப்பேரரசு வைரமுத்து நெகிழ்ச்சிக் கவிதை!



கலைஞர் பெயரில்
ஒரு பல்கலைக்கழகம்
காணவேண்டும் என்பது
நீண்டநாள் கண்டுவந்த
நெடுங்கனவு

திருவாரூர் மத்தியப்
பல்கலைக்கழகத்திற்குக்
கலைஞர் பெயரைச் சூட்டுவதில்
சட்ட சாத்தியங்கள் குறைவு
என்றறிந்து வாடிப்போனேன்

இப்போது
கும்பகோணத்தில்
தமிழ்நாடு அரசே
பல்கலைக்கழகம்
அமைக்கவிருக்கிறது
என்ற அறிவிப்பில்
உச்சி குளிர்ந்தது:
உள்ளம் மலர்ந்தது

தமிழ்நாட்டில்
உயர் கல்விக்குத்
தங்க மகுடம் சூட்டிய
தலைவன் பெயரால்
பல்கலைக்கழகம் அமைவது
நாட்டுக்கு உழைத்தவர்க்கு
நாம்காட்டும் நன்றியாகும்

முதலமைச்சர்
இந்தப்பணியை ஆற்றுவது
தந்தைக்கு மகன்செய்யும்
நன்றியல்ல;
தமிழுக்குத் தொண்டன்செய்யும்
கடமையாகும்

கலைஞர் பல்கலைக்கழகம்
உலகத் தரத்தில் உருவாகட்டும்
அந்த ஆலமரத்தில்
ஆயிரம் பறவைகள்
கூடு கட்டட்டும்
தமிழன் அறிவு
உலக ஞானமாய் உயரட்டும்

இதுதான்
கலைஞருக்குக் கட்டப்படும்
மெய்யான அறிவாலயம்

கலைஞர் மீது
காதல் கொண்டவர்கள் சார்பில்
முதலமைச்சருக்கு நன்றி

அந்தப் பல்கலைக்கழகத்தின்
சுவர்களைத் தொட்டுப் பார்க்க
என் பத்து விரல்களும்
இப்போதிருந்தே படபடக்கின்றன

சீக்கிரம் கட்டுங்கள்;
சிகரம் எட்டுங்கள்



கவிப்பேரரசு
வைரமுத்து